OS: 168/2019

Date: 01.04.2026

பெயர் : வெங்கட்ராமன் **(வா.சா.1) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :-</u>

1. தாவா பி செட்டியூல் சொத்தானது எனது குடும்பத்தார் ஏற்படுத்திய பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது சித்தப்பா வெங்கடாசலத்திற்கும் சி செட்டியூல் சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றாலும் அதன் சர்வே எண் 57/6ஏ, என்றாலும், அந்த சி செட்டியூலில் பொது கிணறும் மற்றும் வேறு சில சொத்துக்களும் இருந்தது என்றாலும் ஆமாம். அந்த சி செட்டியூல் சொத்தைதான் 1ம் பிரதிவாதி கிரயம் பெற்றார் என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதியான என் தாயாருக்கு என் தகப்பனார் கிரயம் வாங்கி கொடுத்தார். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எனது தாயார் அவருடைய வருமானத்தை கொண்டு சுயராஜ்ஜித சொத்து என்றால் சரியல்ல. எனது பிரமாண பத்திரிக்கையில் எனது தகப்பனார், அவரது சகோதரர் கந்தசாமி என்பவர் மிரட்டி பாகம் பெற்றுக்கொள்ளவார் என்பதற்காக தன் மனைவி பெயரில் கிரயம் ஏற்படுத்தியுள்ளார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பி செட்டியூல் சொத்திற்கான அனைத்து வருவாய் துறை ஆணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் ஆகிய அனைத்து ஆவணங்களும் எனது தாயார் பெயரிலேயே இருந்தது என்றால் சரியல்ல. அதற்கு பின்னிட்டுதான் UDR சமயத்தில் என் தகப்பனார் பெயருக்கு மாற்றி தவறுதலாக பட்டா கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அந்த பட்டாவை திருத்தம் செய்யவேண்டுமென்று என் தாயார் வட்டாட்சியர் அவலுவலகத்தில் மனு கொடுத்ததன்பேரில் மீண்டும் என் தாயாரின் பெயருக்கு பட்டா மாற்றி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கில் ஈ செட்டியூல் சொத்தாக காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் குடும்பத்தின் தேவைக்காக விற்கப்பட்டவில்லை என்றாலும், எனது மகனின் கல்வி செலவிற்காக விற்கப்பட்டது என்றாலும் விற்றதற்கு காரணம் எனது மகனின் கல்விக்குதான் ஆனால் அவரவர்கள் அவரவர் பங்கிற்கான தொகையை வாங்கிகொண்டார்கள். எனது பாட்டியும், சித்தப்பாவும் எனது தாயாரான 1ம் பிரதிவாதிக்கு விற்றசொத்து பூர்வீக சொத்தில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு கிரயம் பெற்றது அல்ல என்றாலும், எனது தாயார் அவரது தனிப்பட்ட வருமானத்தின் மூலம் கிரயம் பெற்ற சொத்து என்றால் சரியல்ல. என் தாயாருக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் கிடையாது. சர்வே எண் 57/6ஏ என்பது பூர்வீக கூட்டுக்குடும்பச் சொத்து

என்றாலும் 1ம் பிரதிவாதிக்கு ஆவணம் எழுத உரிமையுள்ளது என்றாலும் அவர் தனிப்பட்ட வருமானம் இருந்தது என்றாலும் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(ஒப்பம்/—த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.